(72) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு சொந்தமான MSL 5005 உள்ள பணியாளர் வாகனத்திற்கு 17-3-1979 முதல் 30-6-1980 வரைக்கான காலத்திற்கு செலுத்தக்கூடிய அபராதத் தொகை ரூ. 534/– செலுத்தக் கூடியது தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 9-11-1983 ஆம் நாளிட்ட 2348 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(73) கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான சில வாகனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 14-11-1983 ஆம் நாளிட்ட 2391 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் 25(2) பிரிவின் (தமிழ்நாடு சட்டம் எண் 13/1974) கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(74) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதி நிலை அறிக்கையும், 1982–83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை துணை அறிக்கையும் [1948 ஆம் ஆண்டு மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(75) 1980–81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சக்தி (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(76) 1982–83 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிடங்குகள் கழகத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு அறிக்கை (கழகத்தின் தணிக்கை அறிக்கையுடன் கூடியது) (ஆங்கிலம்) [1962 ஆம் ஆண்டு கிடங்குகள் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

(77) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(12) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையாற்றும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை.

(13) 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

(14) 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 16/1983) அதிகார முறையில் வெளியிடுவதை அவசியமாக்குகிற சூழ்நிலையை விளக்கி தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 182 ஆம் விதியின் கீழ் அளிக்கப்படும் விவர அறிக்கை].

இணைப்பு I

(..43—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 24-க்கான விடையைக் காண்க)

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ):—1931 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் தமிழ்நாடு அரசால் தஞ்சாவூரில் தொடங்கப் பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்கலைக் கழக மானயக் குழு மற்றும் மைய அரசின், பல்கலைக்கழக மான்யக் குழுச் சட்டம் பிரிவு 12 (ஏ)-ன் கீழ் நிதி உதவி பெற, தகுதி உள்ளது தானா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை, பல்கலைக் கழக மான்யக் குழு நியமித்துள்ளது.

1. பேராசிரியர் எம். வி. மாத்தூர்,
எமிரிடிஸ் பேராசிரியர்,
தேசியக் கல்வி திட்டம் மற்றும் நிர்வாக நிலையம்,
புதுடில்லி.

2. பேராசிரியர் ஜி. ராம்ரெட்டி,
துணைவேந்தர்,
ஓஸ்மேனியா பல்கலைக் கழகம்,
ஹைதராபாத்.

3. பேராசிரியர் ராம் ஜோஷி,
துணைவேந்தர்,
பம்பாய் பல்கலைக் கழகம்,
பம்பாய்.

4. டாக்டர் ஏ. கே. தான்,
துணைவேந்தர்,
ராஞ்சிப் பல்கலைக் கழகம்,
ராஞ்சி.

5. டாக்டர் டி. பி. பட்நாயக்,
இயக்குநர்,
இந்திய மொழிகள் மத்திய நிலையம்,
மைசூர்.

6. திரு. எம். ஆர். கொல்ஹாட்கர், இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சகம்,
புதுடில்லி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS